சி.சி .எண்.3498/2023 நாள்.04.09.2025 பக்கம்.301/2020

ம.சா .1.ஜுல்பிகர்அலி, த/பெ.

எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச. பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.

சி.எம்.பி.எண்.858/2024, கடந்த 25.04.2024 மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.

மேற்படி கொள்முதலின் மதிப்பானது சுமார் 4 கோடி இருக்கும் என்றால் சரிதான். வெளிநாட்டு ஏற்றுமதி தொழில் செய்து வரும் நிறுவனங்களை ECGC (Export Credit Guarantee Corporation) என்ற அரசு நிறுவனம் கண்காணித்து வருகிறது என்றால் அது இறக்குமதி செய்து வரும் நிறுவனங்களை கண்காணித்து வருகிறது. ஜவுளி வர்த்தகம் செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதிபின்புலம் குறித்து மேற்படி ECGC யிடம் தகவல் இருக்கும் என்றால் சரிதான். ரூ. 4 கோடிக்கு மேல் வர்த்தகம் செய்ய இருந்த மேற்படி ACE USA என்ற நிறுவனத்தின் நிதிபின்புலம் குறித்து தகவல்களை வைத்திருக்கும் ECGC யிடம் அந்த நிறுவனத்தின் நிதிபின்புலம் குறித்து நான் எந்த தகவலும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஜவுளி ஏற்றுமதி தொழிலில் ஒரு கொள்முதல் ஆணை பெறும்போது பொதுவாக, கொள்முதல் ஆணை தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை பெறுவோம் என்றால் சரிதான். ACE USA என்ற நிறுவனத்தில் நான் ஜவுளி தொழில் செய்வதற்காக முன்தொகை வாங்கியது குறித்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் நான் வாங்கவில்லை.

2. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ACE USA என்ற நிறுவனம் தன்னுடைய PO–ஐ ரத்து செய்துவிட்டதற்கான காரணம் என்ன என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு PO–ஐ ரத்து செய்திருந்தால் எனக்கு

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

பெரியளவில் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றால் எனக்கு இழப்பு ஏற்பட்டது. மேற்படி இழப்பிற்கு காரணமான ACE USA என்ற நிறுவனத்தின் மீது நான் எந்தவிதமான சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ACE USA என்ற நிறுவனத்தை பொறுத்த கொள்முதல் ஆணையை ECGC–ல் அப்ரூவல் வாங்கியிருந்தால் அவர்களே எனக்கான இழப்பீட்டில் குறிப்பிட்ட சதவிகிதத்தை பெற்றத்தருவார்கள் என்றால் நான் ஏற்றுமதி செய்திருந்து இழப்பீடு ஏற்பட்டிருந்தால் மட்டுமே அதனை எனக்கு பெற்றுத்தருவார்கள். நான் 20 வருடங்களாக ஜவுளித் தொழில் செய்து வருவதால் அதற்கான அறிவுத்திறன் உள்ளது என்றும், ACE USA என்ற நிறுவனம் என்னிடம் உண்மையிலேயே கொள்முதல் ஆணையை கொடுத்திருந்தால் அதுகுறித்து நான் ECGC–ல் அந்நிறுவனம் குறித்து விசாரித்திருப்பேன் என்றும், அப்படியொரு நிறுவனமே இல்லை என்றும், அதனால் தான் ECGC–ல் அதுகுறித்து நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ACE USA என்ற நிறுவனத்தின் பங்குதாரர் குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. ACE USA என்ற நிறுவனத்தின் கூட்டாண்மை பதிவு சான்றிதழ் ஏதேனும் இருக்கிறதா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தோடு நான் எந்தவிதமான வியாபார தொடர்பும் நான் வைத்துக்கொள்ளாததால் தான் நான் அதுப்பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. ACE USA என்ற நிறுவனத்தின் பங்குதாரர்கள் என்று கூறி என்னை இரண்டு நபர்கள் தொடர்பு கொண்டு என்னுடைய தயாரிப்புகளை உள்ளது உள்ளபடியே கொள்முதல் செய்து கொள்வதாக கேட்டுக்கொண்டார்களா என்றால் அவர்கள் ACE USA என்ற நிறுவனத்தின் இந்திய கிளை நிறுவனமான ACE India நிறுவனமாகும். ACE India என்ற நிறுவனம் ACE USA என்ற நிறுவனத்தின் கிளை நிறுவனமா என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் ஆம் அவர்கள் தான் என்னை தொடர்பு கொண்டார்கள். ACE India என்ற நிறுவனம் ACE USA என்ற நிறுவனத்தின் இந்திய கிளை நிறுவனமே

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

கிடையாது என்றும் வழக்கிற்காக அது ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக, ஜவுளி ஏற்றுமதி தொழில் கொள்முதல் ஆணை கொடுத்த நிறுவனத்தின் சார்பில் தயாரிப்பு பொருட்களின் தன்மைத்தரம் குறித்து ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நான் ACE USA என்ற நிறுவனத்தின் போடப்பட்ட கொள்முதல் ஆணையின்படி நான் தயாரிக்கப்பட்ட ஜவுளிப்பொருட்களை மேற்படி நிறுவனத்தால் ஆய்வு செய்யவில்லை என்றால் நான் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை. நான் மேற்படி PO–ன் படி ஜவுளிப்பொருட்களை தயாரிக்கவில்லை என்றும், அதனால் அவர்கள் ஆய்வு செய்யவில்லை என்றும் அதனால் தான் நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஆன்டனிபால், பாயல்ஆன்ட்ரியா என்ற இருவரும் தங்களுடைய தரக்கட்டுப்பாடு அலுவலரான கௌரிசங்கர் என்பவரிடம் கடிதத்தை கொடுத்தனுப்பியதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி கௌரிசங்கர் யார் என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் மேற்படி இருவரும் கடிதத்தில் கையெழுத்திட்டு கௌரிசங்கரிடம் கொடுத்தனுப்பியிருந்தார்கள். அந்த கடிதத்தில் மேற்படி இருவரும் தான் கையெழுத்து செய்தார்கள் என்பதை நான் உறுதிசெய்துகொண்டேனா என்றால் அவர்கள் இருவரும் கையெழுத்து செய்து சீல் வைத்திருந்தார்கள், கௌரிசங்கரும் கையெழுத்து செய்திருந்தார். கௌரிசங்கர் என்ற நபரே கிடையாது என்றும், அவர் தங்களால் தயாரிக்கப்பட்ட பாத்திரம் என்றும், தாங்களே ஒரு பொய்யான ஒரு கடிதத்தை இந்த வழக்கிற்காக தயார் செய்து அதை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. என்னுடைய சரக்குகளை பெறுவதற்காக வந்ததாக சொல்லப்படும் கௌரிசங்கர் என்பவர் மேற்படி சரக்குகளை எந்த வாகனத்தில் ஏற்றிசென்றார் என்றால் லாரியில் ஏற்றிச்சென்றார். அந்த லாரியின் விவரம் குறித்து என்னுடைய புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி லாரியின் விவரம் தெரிந்திருந்தால் அந்த லாரியின்

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

விவரத்தை வைத்து என்னுடைய சரக்கு எங்கே கொண்டு செல்லப்பட்டது என்பது பற்றி விசாரித்திருப்பேன் என்றும், அவ்வாறு நடக்கவில்லை என்பதால் தான் அதுப்பற்றி புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிரிகளை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும் அவருடன் நான் வியாபாரம் செய்து வந்தேன் என்று சொன்னால் எனக்கு அவர்களை தெரியாது. அவ்வாறு தெரியாது என்று சொல்வது தவறு, 3ம் எதிரி உரிமையாளராக இருக்கும் நிறுவனத்தில் நான் வியாபாரம் செய்துவந்தேன் என்றும் அவர்களுக்கும் எனக்கும் வியாபார ரீதியிலான பரிவர்த்தனை இருக்கிறது என்றும், அதை எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார்கள். ***சாட்சி பின்னிட்டு இந்த வழக்கின் தொகை செலுத்தாததற்கு பின்னிட்டு தான் 2, 3 எதிரிகளை எனக்கு தெரியும் என்று கூறுகிறார்.*** நான் தாக்கல் செய்த புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து தான் அதில் உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டு தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகார் வாக்குமூலம் 7ம் பத்தியில் 2 மற்றும் 3 எதிரிகள் முறையிடுபவரை ஏமாற்றும் நோக்கத்துடன் மோசடி செய்ததற்கு தனி குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் உரிமையை முறையிடுபவர் தக்கவைத்துக்கொள்கிறார் என்று கூறியுள்ளேனா என்றால் ஆம். என்னுடைய புகார் வாக்குமூலத்தை கடந்த 2019 ஆண்டு அக்டோபர் மாதம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். கடந்த 6 வருடங்களாக நான் மோசடியாக ஏமாற்றப்பட்டதாக கூறப்படுவது குறித்து தகுந்த குற்றவியல் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. உண்மையில் நான் இவ்வளவு பெரிய தொகைக்கு நான் ஏமாற்றப்பட்டிருக்கிறேன் என்றால் நான் குற்றவியல் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு நான் எந்தவொரு பெரிய தொகைக்கும் ஏமாற்றப்படவில்லை என்பதால் தான் நான் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நாளது தேதி வரை எதிரிகள் மீது எந்தவொறு குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.